C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள்; நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம்.

சங்கீதம்: *20:7*

பொழிவு : 14 | NOVEMBER '2022 | ஆகாரம் : 11



# Christmas Program Plan - 2022

| Event | Date | Time |
|---|---|---|
| **1.ECUMENICAL CHRISTMAS CAROL SERVICE-2022**<br>அனைத்து திருச்சபையின் கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனை -2022 | 3RD DECEMBER -2022<br>(SATURDAY) | 6:30PM |
| **2. CHILDREN BIBLE SCHOOL (CBS)**<br>**CHILDREN CHRISTMAS PROGRAM-2022**<br>சிறுவர் கிறிஸ்துமஸ் கலைநிகழ்ச்சி -2022 | 10TH DECEMBER -2022<br>(SATURDAY) | 7.45PM |
| **3.FAMILY CHRISTMAS SING SONG SERVICE -2022**<br>குடும்ப கிறிஸ்துமஸ் கீத ஆராதனை -2022 | 17TH DECEMBER -2022<br>(SATURDAY) | 7.45PM |
| **4. CHRISTMAS TREE -2022**<br>கிறிஸ்துமஸ் மரவிழா-2022 | 24TH DECEMBER -2022<br>(SATURDAY) | 7.45PM |
| **5. CHRISTMAS SERVICE -2022**<br>கிறிஸ்துமஸ் ஆராதனை -2022 | 25TH DECEMBER -2022<br>(SUNDAY) | 5.00AM |
| **6. CHRISTMAS CAROL ROUNDS -2022**<br>கிறிஸ்துமஸ் கீதபவனி-2022 | 5TH - 15TH DECEMBER -2022 | - |
| **7. 12- HRS CHAIN PRAYER -2022**<br>12மணி நேரம் சங்கிலி தொடர் ஜெபம் -2022 | 31ST DECEMBER -2022<br>(SATURDAY) | 6.00AM-<br>6.00PM |
| **8. YEAR END -2022/ NEW YEAR SERVICE -2023**<br>பழைய ஆண்டு-2022 / புதிய ஆண்டு ஆராதனை | 31ST DECEMBER -2022/<br>1ST JANUARY -2023 | - |

# FROM THE PASTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பான இறை மக்களே!

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

'எசேக்கியா செய்ததெல்லாம் வாய்ந்தது'

—2நாளாகமம்:32:30

*'And Hezekiah prospered in all his works'.*

- 2 Chronicles:32:30

- கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தார். — 2நாளா:29:2
- கர்த்தரின் ஆலயத்திற்குப் போனார். — 2 நாளா: 29:20
- கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணினார். — 2நாளா:30:19
- கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவராய் இருந்தார். — 2 நாளா:32:8

இன்றைக்கு நம்முடைய விசுவாச வாழ்வில் அவரைப் பற்றிக் கொண்டு ஆண்டவருக்குள் நிலைத்து நிற்கும் போது நாம் செய்யும் காரியங்கள் அனைத்தும் வாய்க்கும் .

கடந்த காலம் முழுவதும் நம்மை வழிநடத்தி, பாதுகாத்து வருகின்ற நமது ஆண்டவரை உங்களுடன் இணைந்து உள்ளத்தின் ஆழத்தில் இருந்து துதிக்கின்றேன். தொடர்ந்து இந்த காலக்கட்டத்தில் இந்த தேசத்தில் நம்மை

பாதுகாத்து வழி நடத்தி வருகின்ற ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். தொடர்ந்து அநேகர் இந்த காலகட்டத்தில் வேலைவாய்ப்புகள் இல்லாமல் பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டப்படுகிற குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்.

## சகல பரிசுத்தவான்களின் திருநாள் - ALL SAINT'S DAY

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் முதல் தேதி "சகல பரிசுத்தவான்கள் திருநாளாக" அனுசரிக்கப்படுகிறது. இதனுடைய பின்னணியைக்குறித்து புரிந்து கொள்ள அழைக்கப்படுகிறோம். "SAINT" தூயவர் (அ) பரிசுத்தவான்கள் என்னும் ஆங்கிலச் சொல் "SANCTUS" என்னும் இலத்தீன் பதத்தில் இருந்து வந்தது ஆகும். இதற்கு இணையான கிரேக்கச் சொல் "HAGIOS" இதன் பொருள் தூய்மை,பரிசுத்தம் என்பதாகும்.இரத்த சாட்சியாக மரித்தவர் கள், பரிசுத்தவான்களை நினைவுகூரும் வண்ணமாக தொடக்ககால திருச்சபையில் "சகல பரிசுத்தவான்களின் திருநாள்" அனுசரிக்கப்பட்டது. POPE GREGORY III (731–741) காலக்கட்டத்தில் நவம்பர் முதலாம் நாள் "சகல பரிசுத்தவான்களின் திருநாள்" என்று கொண்டாடப்பட்டது என்று வரலாற்று மூலமாக அறிந்துக் கொள்ள அழைக்கப்படுகிறோம்.கத்தோலிக்க மற்றும் வைதீக (ORTHODOX) திருச்சபையினர் இந்த பரிசுத்தவான்கள் கடவுளிடம் நமக்காக இறைவேண்டல் (INTERCEED) செய்கிறார்கள் என்று நம்பி அவர்களிடம் மன்றாட்டை தெரிவிப்பதை நாம் காணமுடியும்.இவ்வாறாக, தொடக்கக் கால திருச்சபையில் பரிசுத்தவான்களை நினைவுக்கூர்ந்து, அவர்களிடம் வேண்டினார்கள்.

## சகல ஆத்துமாக்களின் திருநாள் - ALL SOUL'S DAY

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் இரண்டாம் நாள் இந்த " சகல ஆத்துமாக்களின் திருநாள்" அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள் என்பது கிறித்தவர்களின் மிகவும் சிறப்பான நாள் ஆகும். இந்த நாளில் சிறப்பான ஆராதனைகள் ஆலயத்தில் நடைபெறும்.அத்துடன் கல்லறை தோட்டங்களில் நடைபெறும்.இந்த நாள் புனித நாளாக அனுசரிக்கப்பட்டது.பொதுவாக இந்த நாளில் தங்கள் குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து , பல பணிகளை குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும் செய்து இறைசமூகத்திற்கு கடந்து சென்றவர்களின் வாழ்விற்காக அனுசரிக்கப்படுகிறது.

## சேர்மின் பண்டிகை - HARVEST FESTIVAL -2022

கடந்த அக்டோபர் மாதம் 29,—2022—ஆம் தேதி சனிக்கிழமை மாலை:6.00 மணி முதல் 10.30மணி வரை நமது திருச்சபையின் வருடாந்திர சேர்ப்பின் பண்டிகை (HARVEST FESTIVAL) ECC வளாகத்தில் ஆண்டவரின் துணையால் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த சிறப்பான நாளில் நம்மிடையே அமீரகத்தின் (UNITED ARAB EMIRATES) தென்னிந்திய திருச்சபையின் (CSI.CHURCH) போதகர்கள், திருச்சபையின் மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அந்த நாளில் சிறப்பு செய்தியை REV.J.JOHN JEBALIN JOSE, PRESBYTER (CSI.TAMIL PARISH – SHARJAH) பகிர்ந்து கொண்டார்கள். அந்த நாளில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்த PASTOR.STANTON LOYD RUBESH, PASTOR.GERALD LONG JOHN (ECC) ஆகியோருக்கு திருச்சபையின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் திருச்சபை குடும்பத்தார் அனைவரும் ஜெபத்துடன் தங்களின் பங்களிப்பினை அளித்து சிறப்பித்திர்கள்.ஏலப் பொருட்கள் கொண்டு வந்து படைத்தீர்கள், ஏலம் எடுத்து திருச்சபையின் வளர்ச்சி பணியில் உங்களை இணைத்துக் கொண்டீர்கள், ஸ்டால் அமைத்தீர்கள் எனவே ஒவ்வொரு குடும்பத்தினருக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் சேர்பின் பண்டிகையின் பொறுப்பாளர்களாக இருந்து திருபணியைச் செய்த திரு.நெல்சன் சோபிதராஜ் மற்றும் திரு.ஹெவன் ஹெபா ஆகியோரைத் திருச்சபையின் சார்பில் பாராட்டுகிறோம்.நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.அத்துடன் ஒவ்வொரு வாரமும் (WEEKLY FOOD) உணவு மற்றும் தின்பண்டங்கள் விற்பனை நடைபெற்றது திருச்சபை குடும்பத்தார் அனைவரும் தங்களது பங்களிப்பை அளித்து திருச்சபை வளர்ச்சி பணிகளில் தங்களை இணைத்துக் கொண்டீர்கள் உங்கள் அனைவருக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த பொறுப்பினை ஏற்று செய்த திருமதி.ஷெர்லி மெல்பின் மற்றும் திருமதி.ஜாக்ளின் மில்கா ஹெவன் ஆகியோரை திருச்சபையின் சார்பில் பாராட்டுகிறோம், நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.மேலும் சேர்பின் பண்டிகையில் தங்களை இணைத்துக் கொண்டு ஜெபித்த, உழைத்த, தங்களின் பொறுப்பினை ஏற்று பங்களிப்பினை வழங்கிய அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

## கிறிஸ்துமஸ் –2022

வருகின்ற டிசம்பர் மாதம் கிறிஸ்து பிறப்பின் திருநாளாக அனுசரிக்க இருக்கிறோம். அதற்காக திருச்சபையார் ஜெபிக்கும் மாறும் அனைத்து நிகழ்வுகளுக்காவும் ஆயத்தபடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.


தொடர்ந்து இந்த காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபை களுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்ளைகளின் கல்விற்க்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக, அவர்களின் உயர் கல்விக்காக அத்துடன் அவர்களின் ஆவிக்குரிய வாழ்விற்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். மேலும் நமது திருச்சபையின் அனைத்து திருப்பணிகளுக்காக, திருச்சபையின் அனைத்து குடும்பங்களுக்காக ஊக்கமாய் ஜெபிக்கும் மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.




ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்.

Rev.S.D.Baskar






# அரசரின் வெற்றிக்கான (ஜெபம்) மன்றாடல்

**- சங்கீதம்:20**

சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள்; நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம்

-சங்கீதம்: 20:7

*Some trust in chariots and some in horses, but we trust in the name of the Lord our God.*

*- Psalm:20:7*

## முன்னுரை

இந்த சங்கீதம் ஒரு அரசர் போருக்கு புறப்படும்முன் அவரது வெற்றிக்காக நடத்தப்பட்ட வழிபாட்டின் போது பாடப்பட்ட பாடலாகும். இந்த வழிபாட்டின் போது போருக்கு முன்பு செலுத்தப்படும் பலியை பற்றி குறிப்பு இங்கு காணலாம் (சங்:20:3) "வெற்றி" என்ற சொல் இந்த சங்கீதத்தில் ஐந்து முறை வருவதை காணலாம். (சங்:20:5,6,9) இந்த பாடல் முன்னையே அரசர்களின் காலத்தில் பாடப்பட்ட பாடல் ஆகும். (1 இராஜா:8:44)

Psalms:20 & 21

These two Psalms from a pair of royal Psalms. Psalms:20- is a prayer that God will give success to the David king, particularly in battle. Psalm:21- gives thanks to God for answering the request of Psalm:20

## ➤ அரசருக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்று மன்றாடுதல்.

**– சங்கீதம்:20:1–4**

வசனம்:1 - ஆபத்து நாளிலே கர்த்தர் உமது ஜெபத்தைக் கேட்பாராக.

இது சில சமயங்களில் வட நாட்டினரையும் சில சமயங்களில் தென் நாட்டினரையும் குறிக்க இந்த பெயர் ("யாக்கோபின் தேவன்") பயன்படுத்தப்பட்டது.

வசனம்:2 - சீயோனிலிருந்து உம்மை ஆதரிப்பாராக.

சீயோன் என்பது திருக்கோயில் கட்டப்பட்ட இடம் ஆகும். இது ஒரு மலை, இதை பரிசுத்த ஸ்தலமாக கருதப்படும். எனவே ஆண்டவரை நோக்கி கூப்பிடும்போது சீயோனிலிருந்து உம்மை ஆதரிப்பார் என்பதை அடையாளப்படுத்துகிறது.

வசனம்:3 - உமது சர்வாங்க தகன பலியைப் பிரியமாய் ஏற்றுக் கொள்வாராக.

போருக்கு செல்லும் முன் அரசர் அளித்திடும் பலிகளை குறித்து இது குறிப்பிடுகிறது.

## ➤ அரசருக்கு வெற்றி நிச்சயம் கிடைக்கும் என்று விசுவாசித்தல்

**– சங்கீதம்:20:5–9**

வசனம்:5 - நாங்கள் உமது இரட்சிப்பினால் மகிழ்ந்து. உமது வேண்டுதல்களையெல்லாம் கர்த்தர் நிறைவேற்றுவாராக

இது போரில் இஸ்ரயேல் ஆண்டவரை மட்டுமே நம்பி இருக்க வேண்டும் பிற உதவிகள் தேவையில்லை என்ற ஆண்டவரின் கட்டளையை காண முடிகிறது. எனவே ஆண்டவரின் மீது நம்பிக்கை கொள்ளும் போது அவரே அனைத்தையும் நிறைவேற்றுவார்.

வசனம்:7 - சிலர் இரதங்களைக்குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள், நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம்

இது வெற்றியை அருளும் ஆண்டவரை நாங்கள் அழைக்கும் போது அவர் எங்களுக்கு உதவி செய்வார். நாங்கள் இரதங்களைக் குறித்தும், குதிரைகளைக்

குறித்தும் மேன்மை பாராட்டவில்லை எங்களுக்கு உதவி செய்கிற தேவனாகிய கர்த்தரைக் குறித்து மேன்மை பாராட்டுவோம். அவரே எங்களுக்கு வெற்றியை கொடுப்பார் என்று அரசரின் வெற்றியின் மீது நம்பிக்கையுடன் ஆண்டவரை போற்றி பாடப்பட்ட பாடலாகும்

## நிறைவாக

இன்றைக்கு நாமும் ஆண்டவர் நமது ஜெபங்களுக்கும், துன்பங்களுக்கும் செவி சாய்கிறார் என்று நம்பிக்கை கொள்ள அழைக்கப்படுகிறோம். ஆண்டவர் ஒருவரே நமக்கு எதிராக எழும்பும் தீமைகள், தீய சக்திகள் இவற்றில் இருந்து வெற்றி அளிப்பவர் என்று நம்பிக்கை கொள்ள அழைக்கப்படுகிறோம். அப்படிப்பட்ட வாழ்வுக்காக ஜெபிக்கவும், நம்பிக்கையுடன் வாழவும் அர்ப்பணிப்போம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னதப் பணியில் உங்கள் ஆயர்.

Rev.S.P.Baskar



# லோத்தின் மனைவி



கிறிஸ்துவுக்கு அன்பானவர்களே! உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**"லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்"**

– லூக்கா:17:32

***"Remember Lot's wife"***

*- Luke: 17:32*

லோத்தின் மனைவி பெயர் வேதாகமத்தில் கூறப்படவில்லை. லோத் எப்படி அவளை #திருமணம் செய்தார், அவள் எபிரேய வம்சத்தை சார்ந்தவளா? அல்லது சோதோம் கொமோரா வில் வாழ்ந்தவளா என்றும் தெரியவில்லை. அவள் பெற்றோர் பற்றியும் வேதத்தில் சொல்லப்படவில்லை. ஆனால் அவள் கணவன் பெயரும் பேரப்பிள்ளைகளின் பெயரும் இடம்பெற்றுள்ளது. புதிய ஏற்பாட்டில் லூக்கா: 17:32 ல் #இயேசு_கிறிஸ்து லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள் என்று எச்சரிக்கின்றார். மூததாதையரின் வம்சவழியில் வரவேண்டிய லோத்தின் மனைவி கீழ்படியாமையினால் உப்புத்தூணாக இன்றும் காணப்படுகின்றாள். ஏன் அவள் உப்புத்தூணாக மாறினாள்? என்பது பற்றி விரிவாக பார்ப்போம்.

#லோத்து ஆப்ரகாமின் சகோதரனின் மகன். லோத்தின் தகப்பன் இறந்துவிட்டதால் ஆபிரகாம் லோத்துவை வளர்த்து தான் போகும் இடம் எல்லாம் அழைத்து சென்றார். ஆபிரகாமை மிருக ஜீவனும், வெள்ளியும், பொன்னும்மான பல ஆஸ்திகளை கொடுத்து ஆசீர்வதித்த #தேவன் லோத்துவையும் ஆசீர்வதித்தார். இவர்கள் இருவரின் ஆஸ்தியும் அதிகமாக இருந்தபடியினால் இருவரும் ஒரே இடத்தில் வாழ்க்கை நடத்த முடியாமல் போனதாம். அவர்களிடம் எவ்வளவு சொத்தும் கால்நடையும் இருந்திருக்கும்.

ஆட்டு மந்தைகள் பெருகின போது ஆபிரகாமின் மந்தை மேய்ப்பர் களுக்கும் லோத்துவின் மந்தை மேய்பர்களுக்கும் அடிக்கடி சண்டை வந்தது. இது அவர்களுக்கு ஒரு பிரச்சனையாகவே இருந்து வந்தது. ஆபிரகாம் லோத்துவிடம் சமாதானம் பேசினார். நாம் இருவரும் பிரிந்துவிடலாம். இருவரும் வெவ்வேறு பகுதிகளில் சென்றுவிடலாம். இதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்ட லோத்து. இருப்பதிலேயே செழிப்பான பகுதியான #சோதோம்_கொமோரா பகுதியை தெரிந்து எடுத்து அங்கு சென்றான். அங்கு செழிப்பு இருந்தது ஆனால் அங்குள்ள மக்கள் #கடவுள் பக்தி அற்றவர்களாக இருந்தனர்.

ஒருமுறை லோத்தின் குடும்பம் ஒருபிரச்சனையில் சிக்கி இருந்தது. இதை அறிந்த #ஆபிரகாம் ஓடி வந்து உதவின படியால் லோத்துவின் குடும்பத்தினர் பிழைத்தார்கள். இந்த எச்சரிப்பை லோத்தின் குடும்பம் நினைத்து பார்த்ததாக தெரியவில்லை. சோதோம் மக்கள் பொல்லாதவர்களாகவும் , பாவிகளாகவும் இருந்தார்கள் என்று ஆதி: 13;13 கூறுகிறது. ஆகவே அக்கிரமம் நிறைந்த சோதோம் கொமோராவை அழிக்க கடவுள் நினைத்தார்.

கடவுளால் அனுப்பப்பட்ட தூதத்கள் சோதோமை அழிக்க சென்றார்கள். சோதோம் வாசலில் உட்காந்திருந்த லோத்து அவர்களை வரவேற்று தன் வீட்டிற்கு அழைத்து சென்று புளிப்பில்லாத அப்பங்களை சுட்டு விருந்து பண்ணி அவர்களை நன்றாக உபசரித்தான். தூதர்கள் இரவில் படுக்கைக்கு செல்லும் முன்பதாக சோதோம் பட்டணத்து மக்கள் வாலிபன் முதல் கிழவன் வரை லோத்துவின் வீட்டில் வந்தது யார் என்று அறிய லோத்தின் வீட்டை சூழ்ந்துகொண்டு லோத்தே உன் வீட்டில் வந்த மனுஷரை நாங்கள் அறியும்படி அவர்களை வெளியே கொண்டு வா. என்று சத்தமிட்டார்கள். அவர்களிடம் தவறான உறவு கொள்ளும்படி அவர்களை அனுப்ப கேட்டார்கள்.

லோத்து உடனே வெளியே வந்து கதவை பூட்டி இந்த தவறை செய்ய வேண்டாம். இவர்களை விடுங்கள். என் இரு மகள்களை வெளியே கொண்டு வருகிறேன், ஆனால் என் வீட்டிற்கு விருந்தினர்களாக வந்திருக்கும் இவர்களை ஒன்றும் செய்யாதீர்கள் என்று கதறினான். ஆனால் சோதோம் மக்கள் நீயே பஞ்சம் பிளைக்க வந்தவன் நீ நியாயம் பேசுகிறாயா? அவர்களுக்கு செய்வதை விட உனக்கு அதிகமாக செய்வோம் என்று கூறி லோத்தை தள்ளி கதவை திறக்க பார்த்தார்கள். உடனே தூதர்கள் லோத்தை வீட்டின் உள் இழுத்து கதவை பூட்டி லோத்துவின் வீட்டை சுற்றி இருந்தவர்களின் கண்களை குருடாக்கினார்கள்.

அப்பொழுது தான் தூதர்கள் நாங்கள் ஏன் இங்கு வந்தோம், இந்த பட்டணத்தை என்ன செய்ய போகிறோம் என்ற காரணத்தை சொல்லி இந்த பட்டணத்தையே அழிக்க போகிறோம் என்றார்கள். லோத்தின் குடும்பத்துக்கு மட்டுமல்ல லோத்துவின் மகள்களை திருமணம் செய்ய போகும் புருஷர்களுக்கும் கடவுள் இரக்கம் காட்டினார். ஆனால் லோத்துவின் குடும்பம் இதை பெரிதாக எண்ணவில்லை. அதிகாலையில் தூதர்கள் லோத்துவிடம் சோதோமுக்கு வரும் தண்டனையில் அவர்கள் அழியாதபடி உடனே இந்த இடத்தை விட்டு குடும்பமாக செல்லுங்கள் என்று கூறினார்கள்.

ஆனால் லோத்துவின் குடும்பம் தாமதம் செய்தனர். ஒருவேளை எப்படி இந்த சொத்துக்களை எல்லாம் விட்டுவிட்டு செல்வது என்று யோசித்திருக்கலாம். நேரம் செல்ல செல்ல #கர்த்தர் லோத்துவின் மீது வைத்த இரக்கத்தினால் தூதர்கள் லோத்துவின் குடும்பத்தினரின் கைகளை பிடித்து இழுத்து பட்டணத்தின் வெளியே கொண்டு விட்டார்கள். நான்கு முக்கிய காரியங்கள் அவர்களுக்கு சொல்லப்பட்டது.

1) உன் ஜீவன் தப்ப ஓடிப்போ
2) பின்னிட்டு பாராதே
3) இந்த சமபூமியில் எங்கும் நில்லாதே
4) நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ

ஆனால் லோத்து தூதர்களை பார்த்து மலைக்கு செல்ல முடியாது பக்கத்து பட்டணத்துக்கு செல்ல அனுமதி கேட்டான். அதற்கும் அனுமதி கிடைத்தது. குடும்பமாக புறப்பட்டார்கள். லோத்து சோவாறுக்குள் வரும்போது சூரியன் உதித்தது. கர்த்தர் வானத்திலிருந்து அக்கினியையும் கந்தகத்தையும் வரப்பண்ணி சோதோம் கொமோராவை முற்றிலுமாக ஒன்றும் இல்லாமல் அழித்துப் போட்டார். பலமுறை நான்கு கட்டளைகளை தூதர்கள் சொன்ன போதும் லோத்தின் மனைவி கீழ்படியாமல் அவர்கள் சென்றுகொண்டு இருக்கும் போது என்ன தான் நடக்கிறது என்று திரும்பி பார்த்தாள். அவள் சோதோம் கொமோராவை திரும்பி பார்த்த அடுத்த நொடியே உறைந்து உப்புத்தூண் ஆனாள். லோத்தும் இரு மகள்களும் திரும்பி பார்க்காமல் சென்றனர்.

லோத்தின் மனைவி கடவுளின் விருப்பத்துக்கு கீழ்படியாமல் தன் சொந்த விருப்பத்துக்கு இடம் கொடுத்தாள். அவள் இருதயம் அவர்கள் விட்டு வந்த ஆஸ்திகளை மேலேயே இருந்தது. அவள் ஊரையும், உடமைகளையும், ஆஸ்திகளையும் நினைத்து திரும்பி பார்த்தாள். வாழ்வை இழந்தாள். மத்:6;21 ல் இயேசு கூறுகிறார், உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கின்றதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் என்று வாழ்க்கை வாழுவதற்க்கு சொத்து பணம் முக்கியம் தான் ஆனால் அதற்கு முக்கியதுவம் வைக்காமல் நம்மை படைத்த தேவனுக்கே என்றும் முதலிடம் கொடுக்க வேண்டும்.

கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல – லூக்கா 9:62

உலக இச்சையை பின்னிட்டு பார்க்காமல், பின்மாற்ற வாழ்க்கைக்கு செல்லாமல் கர்த்தரையே நம்பி வாழ்வோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

Mrs . E . Nancy Baskar

இறைப்பணியில் உங்கள் ஆயரம்மா.

# தேவ அன்பு

ஒரு சிறிய பறவை ஒன்று இரவு மழையில் நனைந்தவாறு WILFRED வீட்டு ஜன்னலில் மோதிக் கொண்டிருந்தது. ஜன்னல் வழியாக வரும் வெளிச்சம் நிமித்தமாய் வீட்டிற்குள் வர முயற்சி செய்து கொண்டிருந்தது. WILFRED பறவையைப் பார்த்து இரக்கமுற்று, அது உள்ளே வருவதற்காக ஜன்னலைத் திறந்து வைத்தார். வெளியே இடி மின்னலுடன் மழை பெய்து கொண்டிருந்தது. பறவைக்கு வீட்டிற்குள் வருவதற்கான வழி தெரியவில்லை. வெளியே ஜன்னலோரமாய் முட்டிக்கொண்டுதான் இருந்தது. WILFRED பல முயற்சிகளை செய்தும் பறவைக்கு வீட்டிற்குள்ளே வர தெரியவில்லை. WILFRED தன்னால் இயன்ற பல முயற்சிகளை செய்து பார்த்தும் எல்லாமே வீணாக தான் போனது. கடைசியாக WILFRED: தான் ஒரு பறவையாக மாறினால் மட்டுமே அந்த மழையில் நனைந்து தவித்துக்கொண்டிருக்கும் பறவையை வீட்டிற்குள்ளே அழைத்து வர முடியும் என புரிந்து கொண்டார்.

அன்பானவர்களே!! இதைப் போல தான் பாவத்தில் சிக்கி தவித்துக் கொண்டிருந்த நம்மை மீட்பதற்காக நம் பரம தகப்பன் பரத்திலிருந்து இறங்கி நம்மை போல மனிதன் ஆனார். நமக்கு நித்திய மீட்பை அருள மன்னுருவானார். இந்த மாத இறுதியில் நாம் ADVENT காலத்திற்குள்ளாக அடியெடுத்து வைக்கப் போகிறோம். ஆண்டவரின் பிறப்பை கொண்டாட போகும் நாம், அவரது இரண்டாம் வருகைக்கும் ஆயத்தமாவோம். பிறரையும் ஆயத்தப்படுத்துவோம்.

**"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"**

– யோவான் 3:16

WOMEN'S Fellowship



# "நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்"

1 கொரிந்தியர் 6:12

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரர்களே உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் என் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் கர்த்தர்தாமே இந்த மாதம் முழுவதும் நம்மோடு கூட இருந்து நம்மை ஆசீர்வதிப்பாராக இந்த மாதத்தில் வாக்குதத்தம் ஆக கர்த்தர் நம்மோடு பேச விரும்புகிற வசனம் 1 கொரிந்தியர் 6:12)
எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு நான் ஒன்றிருக்கும் அடிமைப்படமாட்டேன் இயேசு கிறிஸ்து சொல்லுகிறார் பாவம் செய்கிற எவனும் பாவத்திற்கு அடிமை என்று நாம் எதற்கு அடிமைகளாக இருக்கிறோம் என்று சொல்லி நம்மை நாமே சோதித்துப் பார்ப்போம்.

பவுல் தனக்கு இருந்த ஆவிக்குரிய சுதந்திரத்தைத் தவறாக உபயோகிக்க விரும்பவில்லை. தேவனுடைய பிள்ளைகள் தங்களுடைய வாழ்க்கையில் செய்யும்படியான காரியங்களானது தகுதியானதா? ஆண்டவருடைய பிள்ளை என்று அடையாளம் காட்டக்கூடிய ஒன்றாய் இந்தக் காரியம் இருக்கின்றதா என்பதைக் குறித்து சிந்திப்பது மிக அவசியம்.

அநேகர் தாங்கள் விரும்புகிற காரியங்களைச் செய்ய தங்களுக்குச் சுதந்திரம் உண்டு என்று எண்ணிச் செயல்படுகிறார்கள். ஆனால் மெய் கிறிஸ்தவனின் வாழ்க்கையில் நான் இதைச் செய்வது ஆண்டவருடைய நாமத்திற்கு ஏற்றதாக தகுதியாக இருக்குமா என்பதை நாம் சிந்தித்துச் செயல்பட வேண்டியதாய் இருக்கிறது. மேலும் பவுல் எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு,
ஆகிலும்


## "நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்"

-1 கொரிந்தியர் 6:12

என்று சொல்லுகிறார். ஆண்டவருக்கு ஏற்றதாக இல்லாமல் இருக்குமானால் அதற்கு நாம் அடிமைப்படக் கூடாது. தேவனுடைய பிள்ளைகளாய் இருந்தாலும் அவருக்கு ஏற்புடையதல்லாத காரியங்களுக்கு அடிமைப்பட்டவர்களாய் வாழ வாய்ப்புண்டு. அதைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் நிச்சயமாக உங்களுடைய உள்ளத்தில், உங்களுடைய அடிமைத்தனம் என்ன என்பதைக் குறித்து சிந்திக்கும்படியாக உதவிசெய்வார். எப்பேர்பட்ட அடிமைத்தன வாழ்க்கையில் இருந்தாலும் அதில் இருந்து முழுவதுமாய் விடுதலையாக்கி இந்த மாதம் முழுவதும் சுதந்திரமாய் வாழ பண்ணுவாரா கர்த்தருடைய கையில் ஒப்புக் கொடுப்போம் கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

ஆமென்

MEN'S FELLOWSHIP



# தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை



**“தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம்” (1யோவான் 4:16).**

கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படையானது அன்பு என்பதை அறிந்திருக்கிறோம். அதாவது தேவனுடைய அன்பு. நாம் நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய அன்பை அறிந்து விசுவாசித்திருக்கிறோம் என்று வேதம் சொல்லும்பொழுது அந்த அன்பை அறிந்திருக்க வேண்டியது எவ்வளவு அவசியமாய் இருக்கிறது. 1யோவான் 4:10 ‘’நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து’’. நான் ஒரு பாவி, பாவத்தன்மையுள்ளவன். தேவனை நேசிக்க முடியாதவன். ஆனால் தேவன் முதலாவதாக என்னில் அன்புகூர்ந்திருக்கிறார். நான் ஒரு பாவியாக தேவனுடைய அன்பை அறியாதவனாக ஆக்கினைக்கு உட்படுத்தப்பட்ட மனிதனாக வாழ்ந்த அவ்விதமான வேளையில் தேவனே முதலாவது என்னில் அன்புகூர்ந்தார். இந்த அன்பு என்னுடைய வாழ்க்கையில் நான் நல்லவனாக இருந்தபோது அல்ல, பாவியாக இருந்தபொழுதே செலுத்தப்பட்டது.

என்ன ஒரு அருமையான காரியம் இது! நம்முடைய வாழ்க்கையில் இந்த அன்பை அறிந்து விசுவாசித்து அதின் அடிப்படையில் வாழுகின்றோமா? அப்படி வாழுவோம் என்றால் இந்த உலகத்தில் நாம் கலங்கி திகைத்து நம்பிக்கையற்றவர்களாக சோர்ந்துபோனவர்களாக வாழ வேண்டிய அவசியமில்லை. வானத்தையும் பூமியையும் சர்வத்தையும் படைத்து அரசாண்டு வழிநடத்துகிற ஆளுகையின் தேவன் என்னில் அன்புகூறுகிறவர். என்னை நேசிக்கிறவர். என்னுடைய வாழ்க்கையின் நலனை விரும்புகிறவர். ஆகவே நான் அவரை அவருடைய அன்பை விசுவாசிக்கிறேன். என்னை ஒருக்காலும் கைவிடாத அந்த அன்பு நிச்சயமாக இந்த உலகத்தில் முற்றும்முடிய என்னைக் காத்து நித்திய பிரவேசத்திற்குள் அவரோடு என்றென்றைக்கும் வாழவும் அந்த அன்பை ருசிக்கவும் நிச்சயமாக செய்யும் என்பதில் நான் நம்பிக்கையுள்ளவனாக வாழுகிறேன்.

**“அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான்”**

**(1யோவான் 4:7)**

YOUTH FELLOWSHIP




# WILLIAM WARD

(20 OCT 1969 - 7 MAR 1823)

வில்லியம் வார்ட் (WILLIAM WARD) அவர்களின் இந்திய ஊழியம், அச்சகத்தை கவனிப்பதிலேயே அதிக நேரம் செலவு செய்ய வேண்டியதாக காணப்பட்டது. இந்த அச்சகங்கள் குறிப்பாக வேத வசனங்களை அச்சு செய்வதையே நோக்கமாக கொண்டிருந்தது. வேத வசனங்களை பெங்காலி, மராத்தி, தமிழ் தவிர மேலும் 23 பிற மொழிகளிலும் அச்சு செய்து பிரசுரித்து வந்தது. இவ்வளவு பணி நெருக்கடி இருந்தாலும் வார்ட் அவர்கள் சமயம் ஒதுக்கி தன்னை சுற்றியுள்ளவர்கட்கும், அருகிலுள்ள கிராமப் பகுதிகளிலும் சுவிஷேசத்தை பிரகங்கிக்க தவறவில்லை. 1802 ம் வருடம் செராம்பூரில் (SERAMPORE) தான் விதவையானலும் தன் கணவர் ஆரம்பித்த ஊழியம் ஒரு போதும் தடைபடக் கூடாது என்ற நோக்கோடு ஊழியம் செய்து வந்தவரைத் திருமணம் செய்து கொண்ட அவர் 1806 ம் வருடம் வரை



அவர் தங்கியிருந்த இடத்தை சுற்றியுள்ள நகரங்கள், கிராமங்கள் இன்னும் சில உட்புறங்களிலும் சென்று சுவிஷேச ஊழியம் செய்வதை தனது முதற்பணியாகக் கொண்டிருந்தார்.

நாளுக்கு நாள் அவருடைய அச்சகப்பணி மிகவும் அதிகரித்து வந்தது. அதின் நிமித்தம் அவரது பெரும்பாலான நேரத்தை அச்சகத்தில் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 1812ம் ஆண்டு ஏற்பட்ட ஒரு பெரிய தீ விபத்தினால் வார்ட் அவர்கள்

அச்சுப்பணி செய்து வந்த அச்சகம் முற்றுமாக எரிந்து சிதைந்து சாம்பலாய்ப் போயிற்று. அதன் அன்றைய மதிப்பு ஏறக்குறைய பதினாயிரம் பவுண்ட் (10,000 POUNDS) என்று மதிப்பிடப்பட்டது. மீண்டுமாக அந்த அச்சகத்தை மறு சீரமைத்து அதனை செயல்பட பட்டது. வைக்கும் பொறுப்பு வார்ட் அவர்களிடம் ஒப்படைக்கப் இந்தப் பொறுப்பை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்ட வார்ட் அவர்கள் இங்கிலாந்து தேசத்திலிருந்த தனது நண்பர்கள் உதவியால் அதற்குத் தேவையான நிதியைத் திரட்டி அச்சகத்தைப் புதுப் பொலிவோடு புதுப்பித்து செயல் பட வைத்து தனது அச்சகப் பணியை மீண்டும் மிகவும் உற்சாகத்தோடு தொடங்கினார்.

## செராம்பூர் இறையியல் கல்லூரி:

அந்நாட்களில் வார்ட் அவர்களின் உடல் நிலையில் நலிவு பட ஆரம்பித்தது. இதனை உணர்ந்த அவரது உடன் ஊழியர்கள் அவரை சிகிட்சைக்காக இங்கிலாந்து செல்ல அறிவுறுத்தினர். அதனை ஏற்றுக் கொண்ட வார்ட் அவர்கள் 1818ஆம் ஆண்டு சிகிட்சைக்காக இங்கிலாந்து சென்றார். உடல் நிலை மோசமான நிலையில் இருந்தாலும்,சுவிசேஷப் பணிக்காக நிதி திரட்டும் பணியிலும் மும்முரமாக ஈடுபட்டார். அந்த நிதியைக் கொண்டு செராம்பூரில், ஊழியக்காரர்கள் ஜாஷ்வா மார்ஸ்மான் (JOSHUA MARSHMAN) மற்றும் வில்லியம் கேரி (WILLIAM CAREY) ஆகி யோருடன் இணைந்து ஒரு கல்லூரியை ஆரம்பிதார். அதன் முக்கிய நோக்கமே மேல் நாட்டு இலக்கியம் மற்றும் விஞ்ஞான அறிவில் அப்பகுதி மக்கள் முன்னேற வேண்டும் என்பதாக காணப்பட்டது.

இந்த கல்லூரியில் அனேகர் இணைந்து பயன் பெற ஆரம்பித்தனர். இதைக் கண்ட சுவிசேஷகர்கள் இந்த கல்லூரியை மேம்படுத்த திட்டமிட்டனர். அந்தப் பணிக்கென மேலும் அதிக நிதி தேவைப்பட்டது. அதன் நிமித்தமாக மீண்டும் வார்ட் அவர்கள் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஹாலந்து மற்றும் ஜெர்மனி (ENGLAND, SCOTLAND, HOLLAND AND GERMANY) ஆகிய தேசங்கட்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு அதிக நிதியோடு திரும்பினர். செராம்பூர் முவர் (SERAMPORE TRIO) 6160 அனைவராலும் அழைக்கப்பட்ட இம்மூவராலும் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி இன்று அனேகருக்கு ஆசீர்வாதமாக காணப்படுகிறது. உலகக் கல்வி மற்றும் இறையியலிலும் அனேகர் மேன்மை பெறும் வகையில் இக்கல்லூரி இன்றும் சிறப்பாக நடை பெற்று வருகிறது.

**இத்தனை மேலான ஊழியத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட வார்ட் அவர்கள் எழுத்துப் பணியிலும் தன்னை அற்பணிக்கத் தவறவில்லை. அதன் பயனாக அவர் எழுதிய அனேக புத்தகங்களை இன்றும் நாம் வாசித்து ஆவியிலே பெலன் பெற முடிகிறது. இவ்வளவு அர்ப்பணிப்போடு ஊழியம் செய்த தேவ மனிதர் 1823 ம் வருடம் மார்ச் மாதம் 7 ம் தியதி காலரா நோயால் பாதிக்கப்பட்டு செராம்பூரில் இறைவனடி சேர்ந்தார். தேவன் நமக்கு ஆசீர்வாதமாக ஊழிய முன்னோடிகளாக தந்த இம்மக்ளின் வாழ்வு நமது ஆவிக்குரிய வாழ்வுக்கும், தேவப்பணியின் தேவை போன்றவற்றை உதவியாக இருக்கும் என நம்புகிறேன். தேவன் தாமே அப்பேர்ப்பட்ட வாய்ப்பினை நம் அனைவருக்கும் தருவாரராக.**

ARTICLE BY

M.NESAMONY & FAMILY



**Read Bible and meditate the word of God everyday**




# 'WHAT'S INSIDE MY HEART?'

• "I have hidden your word in my heart.
• that i might not sin angainst You.




Psalm 119:11






Jason Eric Daniel
Inter- Grade 5

# WHO holds the key to your heart?




## We can guard our hearts and minds through the knowledge of God's word. Knowing the Bible well is key.

"Above all else, guard your heart, for it is the wellspring of life" (Proverbs 4:23).

CBS -- Intermediate

TEACHER -- Mrs. SHIBY

# OCTOBER

## Congratulations

| KIDS COLOURING | CODE WORD | WORD SEARCH | CROSS WORD | BIBLE QUIZ |
|---|---|---|---|---|
| Bernicia | Patricia | Sherin Shah | Shelbino | Shelbino |
| Smyrna Syntche | Jania Preni | Johan Sanjo | Roshan | Roshan |
| Jania Preni | Johan Sanjo | Roshan | Johan Sanjo | Joshua |
| Johan Sanjo | Hazel Hartlyn | Eric Aaron | Sherin Shah | |
| Hazel Hartlyn | Kariss Angelo | Jason Eric | Eric Aaron | |
| Reagan Shan | Sherin Shah | | Joshua | |
| Kariss Angelo | Jason Eric | | | |
| Chris Gabiriel | | | | |

WELL DONE!

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject: Your name / Quiz, type / Month - Year**

**To Church Email: csitcalain@gmail.com**

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# GENESIS: 21-30

## ஆதியாகமம்: 21-30

OCTOBER '22 - QUESTIONS

*1. ஆகார் எந்த வனாந்திரத்தில் அலைந்துதிரிந்தாள்?*

*2. மில்க்காள் எத்தனை பேரை பெற்றெடுத்தார்?*

*3. ஆபிரகாம் தன் மனைவி சாராளை எங்கு அடக்கம் பண்ணினார்?*

*4. ஈசாக்கு எங்கு குடியிருந்தார்? எந்த துரவின் வழியாய் வந்தார்?*

*5. இஸ்மவேலின் வயது என்ன?*

*6. யார்? யாரைப் பார்த்து எங்களை விட்டு போய் விடு என்று சொன்னது?*

*7. ஈசாக்கு நீ யார் என்று யாரை கேட்டார்?*

*8. யாக்கோபு ஆரானுக்கு போக எங்கிருந்து புறப்பட்டார்?*

*9. லாபானுக்கு எத்தனை குமாரத்திகள், அவர்கள் பெயர் என்ன?*

*10. நீ சொன்னபடியே ஆகட்டும் என்று சொன்னது யார்?*






### அக்டோபர் - 2022-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. ஆதி: 11:10 | 2. ஆதி: 12:4 | 3. ஆதி: 13:17 | 4. ஆதி: 14:21 | 5. ஆதி: 15:12
6. ஆதி: 16:14 | 7. ஆதி: 17:24 | 8. ஆதி: 18:26 | 9. ஆதி: 19:23 | 10. ஆதி: 20:14


**திருமதி. ஜோனிஷ் ஹெர்ஷெல், திருமதி.ஜெயந்தா ஜான், திருமதி.ஜெயின் ராஜவேல், திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ரோஸ்லின் பாலாஜி, திருமதி.பிப்லின் நெல்சன், திருமதி.ஹெலன் கம்பீரம் திருமதி.ஜமுணா ராணி, திருமதி. பமீலா டேனியல், செல்வி.அஜின்ஷா, செல்வி.ஷெரின்ஷா**

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.
மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.


YOUR NAME / BIBLE QUIZ / APR'22 | SENT TO: CSITCALAIN@GMAIL.COM

056 766 8348

# KIDS COLOURING



PRIMARY



# JESUS HEALS A PARALYZED MAN





Discover the hidden words.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| S | R | D | J | M | K | N | F | S | G | X | B | R | J | U |
| X | S | T | E | X | U | B | O | L | I | L | R | O | W | F |
| P | H | E | A | M | V | A | O | T | A | N | R | G | F | F |
| S | H | D | N | Z | O | R | N | S | A | I | N | O | A | B |
| U | R | A | O | E | I | N | P | R | C | W | U | E | D | W |
| Q | T | U | R | F | V | H | S | I | E | A | K | R | R | N |
| D | H | P | I | I | E | I | H | L | T | P | B | M | L | S |
| G | K | E | J | M | S | K | G | S | G | G | A | N | L | J |
| J | D | D | V | A | K | E | Z | R | M | U | F | C | V | I |
| S | J | B | W | R | C | S | E | Z | O | J | E | S | U | S |
| G | U | F | A | I | T | H | H | S | Y | F | K | S | V | T |
| T | N | E | T | X | P | A | R | A | L | Y | T | I | C | S |
| S | C | R | I | B | E | S | X | U | H | Y | M | I | Y | K |
| E | J | R | S | R | W | M | S | U | M | G | E | O | Z | E |
| X | T | K | J | R | O | O | F | J | M | O | N | S | R | K |

BLASPHEMY


DEMONS
PHARISEES
SCRIBES
PARALYTIC

CAPERNAUM
ROOF
FAITH
FORGIVENESS

SENIOR
& above

# JESUS HEALS A PARALYZED MAN

## Matthew 9:1–8, Mark 2:1–12, and, Luke 5:17–26



**Across**

**2.** When Jesus reached the house, it was already filled with _______.

**4.** "It is not the healthy who need a doctor, but the sick. I have not come to call the righteous, but _____.

**6.** The response of the paralytic man upon being forgiven and healed was that he ______ God

**7.** The Scribes and Pharisees accused Jesus of ________ because he forgave the man's sins.

**8.** People were excited to see Jesus because of his bold teachings, and because He was healing the sick and casting out ______.

**Down**

**1.** What did Jesus do first for the paralytic man—forgive or heal?

**3.** Which town is Jesus returning to in this story?

**5.** The companions of the paralytic man lowered him down through a hole in the ____ to see Jesus.

**9.** "And when Jesus saw their faith, he said to the paralytic, '___, your sins are forgiven.'

# November

# HAPPY BIRTHDAY

| | |
|---|---|
| 01-NOV | MR. M.C.CHRISTOPHER |
| 06-NOV | MR. PAUL GNANA PRABU.R |
| 06-NOV | MR. GLYMOND FENZER |
| 06-NOV | MRS. A.JENIFER |
| 08-NOV | MASTR. JOASH CYRUS S/O ASHOK DANIEL PRABAKARAN |
| 09-NOV | MRS. SUNITHA RAVINDRA |
| 12-NOV | MS. JENISHA CHRISTINA D/O M.C.CHRISTOPHER |
| 14-NOV | MRS. JEIN ARPUTHAKANI RAJAVEL |
| 14-NOV | MS. BESSY ROSE D/O JUSTIN OLIVER |
| 15-NOV | MASTR. JAHOSH JOHN JOSEPH S/O JOHN JOSEPH |
| 17-NOV | MRS. HARIKA CHANDRASEKAR |
| 17-NOV | MASTR. RAJA SEKAR S/O SELVA NAYAGAM |
| 18-NOV | MASTR. PRINCE ABRAHAM DANIEL |
| 19-NOV | MR. STANLY G |
| 19-NOV | MR. PRINCE EMMANUVEL |
| 19-NOV | BABY. JAYA PRITHI D/O SELVA NAYAGAM |
| 20-NOV | MRS. AJEETHA J |
| 21-NOV | MR. LAWRENCE GAMBEERAM |
| 23-NOV | MRS. CECILIYA RAJKUMAR |
| 23-NOV | MRS. J.VIVILIN JUNI |
| 23-NOV | MASTR. JOEL SHINO MATHEW S/O SHINO P MATHEW |
| 25-NOV | BABY. ABIYA D/O SANKARAN CHINNIYAN |
| 26-NOV | BABY. EVALINA D/O JAYAN DHARMARAJ |
| 27-NOV | MRS. SUJA JASMINE MESIAH DAS |
| 27-NOV | MRS. ANNIE SELVI DANESH |
| 27-NOV | MRS. M.AISHWARIYA |
| 28-NOV | MRS. JOSEPHINE NIMSHI |
| 29-NOV | MR. S.DEVA PRAKASH |

# Happy Anniversary

| | |
|---|---|
| 08-NOV | MR. PREM JENIFER . A / MRS. BABY CHRISTY MONALIZHA |
| 23-NOV | MR. STANLY G / MRS. GOLD JENCY R |
| 30-NOV | MR. BABU ABRAHAM / MRS. BABITHA BABU |


















# Harvest Festival

October 29, 2022

















# Harvest Festival

October 29, 2022








# Harvest Festival

October 29, 2022






**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**